

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103–வது பிறந்தநாள் விழாவை யொட்டி தாம்பரம் மாநகர தி.மு.க சார்பில் தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றினார். அருகில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., பேச்சாளர் கம்பம் பெ.செல்வேந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர், துணை மேயர், பகுதி செயலாளர்கள் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# அரசியல் - கலைஞரிடம் கற்றுக்கொள்!

“1980 ஆம் ஆண்டு சட்ட மன்ற தேர்தல் முடிந்தது. திமுகவிற்கு படுதோல்வி! கட்சிக்குள் எழுச்சியை கொண்டு வர சில முயற்சிகள் செய்தார் தலைவர் கலைஞர். வலது கையின் ஐந்து விரல்களையும் விரித்து காட்டி உதயசூரியன் என்று சொல்ல ஆரம்பித்தார்.

உடன்பிறப்புகள் மத்தியில் ஒரு புத்துணர்வு.

எம்ஜிஆருக்கும் அந்த எழுச்சி புரிந்தது. எழுச்சியை அடக்க ஏதாவது செய்ய வேண்டுமே என யோசித்தார். தெரிந்த பத்திரிகையாளர் ஒருவர் மூலமாக, “முத்தமிழறிஞர் கலைஞர் ஐந்து விரல்களைக் காட்டுகிறாரே?” எனக் கேள்வி கேட்க வைத்தார். அதற்கு இன்ஸ்டன்ட் பதிலாக, “தான் ஒரு பஞ்சமா பாதகன் என்று கலைஞர் சொல்லாமல் சொல்கிறார் போல...” என எம்ஜிஆர் சொன்ன வார்த்தைகளில் தமிழகமே ஆடிப் போனது.

பத்திரிக்கையாளர்கள் தலைவர் கலைஞரின் பதிலை எதிர்பார்த்து ஓடினார்கள். கலைஞர் எங்கே இருக்கிறார் என்பதே பலருக்கும் தெரியவில்லை. இரவு 08:30 மணிக்கு பெரம்பூரில் ஒரு பொதுக்கூட்டம் நடப்பதாகவும் அதில் கலைஞர் பேசுவார் என்றும் தெரிய வந்தது. அதற்கிடையில் மாலை பத்திரிகைகளில், “கலைஞர் பஞ்சமா பாதகன்... எம்ஜிஆர் கடும் தாக்கு” என தலைப்பு செய்திகள் வரத் தொடங்கின. வானொலியிலும் எம்ஜிஆரின் வார்த்தைகளே முக்கிய செய்தியானது. அதனால், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார் என மொத்த தமிழகமும் காத்துக் கிடந்தது.

பெரம்பூர் ராகவாச்சாரி தெருவில் பொதுக் கூட்டம். ஏழு மணிக்கே ஆயிரம் பேர் திரண்டிருந்தார்கள். குட்டி பேச்சாளர்கள் யாரும் இந்த பஞ்சமா பாதகன் விமர்சனம் பற்றி மூச்சுகூட விடவில்லை. சம்பிரதாயமாகப் பேசிவிட்டு அவர்களே கலைஞரின் பதிலுக்காகக் காத்திருந்தார்கள்.

பேப்பர் மில்ஸ் சாலையில் உள்ள காந்தி சிலையை நோக்கி மேடை. முன்னும் பின்னுமாய்க் கட்டுக்கடங்காத கூட்டம். பக்க வாட்டில் இருபுறமும் உள்ள அத்தனை சந்துகளிலும் கூட்டம். வீடுகளின் வாசல்கள் மேல் மாடிகள் எல்லாவற்றிலும் கூட்டம். சுமார்

இருபதாயிரம் பேர் இருந்திருப்பார்கள்.

வரவேற்பது, துண்டு அணிவிப்பது, மாலை போடுவது எல்லாம் கடைசியில் என்று கலைஞர் சொல்லிவிட்டார். மேடையில் மயான அமைதி. மைக் பிடித்தார் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர்.

மைக்கை மட்டுமா பிடித்தார்? எம்ஜிஆரையும் சேர்த்து ஒரே பிடி பிடித்தார்.

“இன்று நண்பர் எம்ஜிஆர் என்னை பஞ்சமாபாதகன் என்றார்.

ஏன் நான் பஞ்சமா பாதகனாம்?

ஐந்து விரல்கள் பிரித்துக் காட்டுகிறேனாம்.



அதனால் பஞ்சமா பாதகனாம்.

(ஐந்து விரல்களையும் பிரித்து காட்டுகிறார் )

இப்படி ஐந்து விரல்களையும் பிரித்து காட்டினால் சைவ சமயத்தை பின் பற்றுபவருக்கு நமசிவாய என்கிற பஞ்சாட்சரம் நினைவுக்கு வரும்.

மகாபாரதம் படித்தவருக்கு பஞ்ச பாண்டவர், பாஞ்சாலி நினைவுக்கு வரும்.

தமிழன் என்றால் சிலப்பதிகாரம், மணி மேகலை,வளையாபதி, குண்டலகேசி, ஜீவக சிந்தாமணி என ஐம்பெரும் காப்பியங்கள் நினைவுக்கு வரும்.

இலக்கியப் புலவர் என்றால் ஐவகை நிலங்கள் நினைவுக்கு வரும்; ஐவகை திணைகள் நினைவுக்கு வரும்.

கர்நாடக சங்கீத ரசிகர் என்றால் தியாகைய்யர் அருளிய பஞ்ச ரத்ன கீர்த்தனை நினைவுக்கு வரும். ஆனால் நண்பர் எம்ஜிஆருக்கு என்று சொல்லி நிறுத்தி கொஞ்சம் இடைவெளி விட்டார் கலைஞர். கூட்டம் ஆர்ப்பரித்தது. தான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை மக்களின் எண்ணத்திற்கே விட்டார் கலைஞர்.

அரசியல் பேச்சு என்பது அப்படியல்லவா இருக்க வேண்டும். இன்றைக்கும் பேசுகிறார்களே... த்தூ! நல்லா வருது வாயில..”

**பலரும் சுட்டிக்காட்டி உள்ள இந்த கருத்தை கூட அறியாமலும், படிக்காமலும் இன்றைய அரசியல் தலைவராக பேசுவதைக் காண்கிறோம்.**



**முனைவர்**
**பொன்னேரி சிவா**
தலைமைக் கழகப் பேச்சாளர்

## உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி

# காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியம் கோளி வாக்கம் ராஜேந்திரன் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்!

### மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர்– க.செல்வம் எம்.பி. –கழகத்தினர் அஞ்சலி!

காஞ்சிபுரம் ஜூன் 5–

கோளிவாக்கம் கிராமத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (3.6.2026) கழகக் கொடிக்கம்பம் நட முயன்ற கழகத்தினர் மூவர் மீது மின்சாரம் பாய்ந்தது. இதில் சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் காயமடைந்தனர்.

கழகத் தோழர்களான ராஜேந்திரன்(வயது 55) காளி (வயது44)குப்பன் (வயது 42). ஆகிய மூவரும் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 20 அடி உயர கொடிக்கம்பத்தை நட முயன்ற போது அருகில் சென்ற உயர்அழுத்த மின்சாரக் கொடிக் கம்பம் உரசியதில் 3 பேரும் தூக்கி வீசப்பட்டனர்.



இதில் ராஜேந்திரன் (55) சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். காளியும், குப்பனும் காயமடைந்து உடனடியாக ஆம்புலன்ஸ் வாகனத் தில் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்செய்தியறிந்ததும் மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் மின்சாரம் தாக்கி உயிர் இழந்த ராஜேந்திரன் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

மேலும் க.செல் வம் எம்.பி. ஒன்றிய செயலாளர் க. குமணன் ஒன்றிய கழக நிர்வாகிகள் த. கன்னியப்பன் ராஜகோபால் வீரராகவன் கமலக்கண்ணன் தட்சணாமூர்த்தி திருநாவுக்கரசு உள்ளிட்ட கழக முன்னணியினர் தோழர் கள் மறைந்த இராஜேந்திரன் உடல் மீது மாலை வைத்து இறுதி அஞ்லி செலுத்தினர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், மீஞ்சூர் தெற்கு ஒன்றிய, ஏலியம்பேடு ஊராட்சியில் முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் முனுசாமி உதயகுமார், சர்மிளா உதயகுமார் ஆகியோர் ஏற்பாட்டில் மாவட்டக் கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு அன்னதானம் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியச் செயலாளர் கி.வேணு ஆனந்த், ஒன்றியச் செயலாளர்கள் ஆ.ராஜா, ஞாயிறு வே.ஆனந்த்குமார், பொன்னேரி நகர் மன்ற தலைவர் பரிமளம் விஸ்வநாதன், பா.து.தமிழரசன், ஜி.பி.வெங்கடேசன், மீஞ்சூர் சு.சுந்தரேசன், மெதுர் முத்துக்குமார், ஜெகன், வேலு, நிர்மலா உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### கே.வெங்கடேசன் தலைமை! முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

# பீர்க்கன்காரணை 59வது வார்டில் நல உதவிகள்!

### லயன் ஆர்.எஸ்.சங்கர் - ராஜேஸ்வரி சங்கர் எம்.சி. - ரயில் ராஜா பங்கேற்பு!

சென்னை, ஜூன் 5 –

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மாநகராட்சி பீர்க்கன்கா ரணை 59 வது வார்டு தி.மு.க. சார்பில் 03.06. 2026 – புதன்கிழமை அன்று காலை 8.30 மணிக்கு பீர்க்கன்கா ரணை கலைஞர் நெடுஞ்சாலையில் 59வது வட்ட கழக செயலாளர் கே.வெங்கடேசன் தலைமையில், கழகக் கொடி ஏற்றி, கலைஞர் திருவு ரு வப் படத்திற்கு மாலை அணி வித்து, மலர்தூவி மரியாதை செலுத் தப்பட்டது.

இதில் பொதுக்குழு உறுப்பினர் லயன் ஆர்.எஸ்.சங்கர், மற்றும் 59வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.எஸ்.ராஜேஸ்வரிசங்கர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் காலை 8.30 மணிக்கு சக்தி நகர் வீட்டுவசதி வாரியம் பகுதியில் கழக மூத்த முன்னோடி வட்டப் பொருளாளர் ரயில் ராஜா ஏற்பாட்டில் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது.

இதில் அவைத் தலைவர் எஸ். கோபாலகிருஷ்ணன், துணை செயலாளர் டி.குமரேசன், ஆர்.பால் பாண்டியன், பகுதி பிரதிநிதி ஜெ. குப்புசாமி, வார்டு பிரதிநிதி தினகரன், தட்சிணாமூர்த்தி, எஸ்.நந்தகுமார்,டி.சுந்தர், இளைஞர் அணி கணபதி, ராஜ்குமார், மோகன், கழக தோழர்கள் கோசல்ராம், சாமியப்பன் மகளிர் அணி எம்.டில்லி பாய், மங்கலட்சுமி ஆர்.பூங்கோதை, வி.பிரியா, வி. கலைசெல்வி, ஏ.வேண்டா, வி.அமுதா கழக முன்னோடி வி. பழனி திரு .பூங்காவனம்,, பி.பாஸ்கர், இ.ரமேஷ், பாஸ்கர், பி.பாலன், கே.ராஜேந்தி ரன், சினிவாசன், பத்மநாபன், மாணவர் அணி சூர்யா, பி.தினேஷ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

மேலும் 59வது வார்டு அனைத்து பாக கழகக் கொடிக் கம்பங்களில்கழகக்கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கி தலைவர் கலைஞர் பிறந்தநாளை சிறப் பாகக் கொண்டாடப்பட்டது. இதில் கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



மாதவரம் வடக்கு பகுதி 15 ஆவது வட்டம் மணலி புதுநகரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு, வட்டச் செயலாளர் கே.அங்கு சாமி ஏற்பாட்டில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கினார். ரவிச்சந்திரன், முகமது வசீம், பக்தவச்சலம், கண்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் நகராட்சியில் உள்ள கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் அறுசுவை உணவுவை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தலைமை செயற்குழு உறுப்பினருமான வி.ஜி.ராஜந்திரன், வழங்கினார் உடன் நகர மன்ற தலைவர் உதய மலர் பாண்டியன், நகரச் செயலாளர் சி. சு. ரவிச்சந்திரன், முன்னாள் நகர் மன்ற தலைவர் பொன் பாண்டியன், மற்றும் நகர நிர்வாகிகள் நகர மன்ற உறுப்பினர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் பொதுமக்கள் பலர் உள்ளனர்.

### சென்னை வடக்கு திட்ட மின்கழக தொ.மு.ச. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள்! முதியோர் இல்லத்தில் உணவு!

### சென்னை வடக்கு திட்ட செயலாளர் கே.சசிகுமார் வழங்கினார்!

சென்னை, ஜூன் 5–

இன்று ஜூன் 3 முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் 103 வது பிறந்த நாள் முன்னிட்டு காலை 9 மணியளவில் சென்னை வடக்கு திட்டம் நாப்பாளையம் பிரிவு, 110 கே.வி.துனை மின் நிலையம் பிரிவு மணலி ஆகிய இடங்களில் பேரவை கொடியேற்றி தலைவர் கலைஞர் படத்திற்கு மாலை அணிவித்து சென்னை வடக்கு திட்டம் சார்பில் தண்டையார்பேட்டை கோட்டம் மணலி புதுநகர் வினாயகர் முதியோர் அன்பு இல்லத்தில் உள்ள முதியோர் அனைவருக்கும் அறுசுவை உணவு தமிழ் நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் மாநில முன்னாள் தலைவர் சென்னை வடக்கு திட்ட செயலாளர் கே.சசிகுமார் வழங்கினார்.

உடன் சென்னை வடக்கு திட்ட நிர்வாகிகள் பொருளாளர் டி. அருள்,து.தலைவர்கள் ஏ.ராஜேந்திரன்,சி.சிவப்பிரகாசம் திட்ட துணை செயலாளர்கள் ஆர்.சங்கர், வேதமணி தண்டையார் பேட்டை கோட்ட செயலாளர் எம்.இளங்கோவன் கோட்ட தலைவர் கணபதி, நாம் பாளையம் கிளை ரவி,முத்து, ஜெய சந்திரன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 124 அ வட்ட அவைத்தலைவர் கு .வீரபத்திரன் அவர்கள் தலைமையில் சாரதாபுரம் கெனால் பேங்க் சாலை சந்திப்பில் தலைவர் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து கழக இரு வண்ணக் கொடி ஏற்றி பொது மக்களுக்கு இனிப்பு மற்றும் குளிர்பானங்களை மயிலை கிழக்கு பகுதி கழக செயலாளர் எஸ் முரளி வழங்கினார். உடன் வட்டக் கழக செயலாளர் மா.பா.அன்பு, எம்.பி.மருதமுத்து, மாவட்ட பிரதிநிதி ஸ்டோன் வி.அருண்குமார் ஏ.எஸ்., என்.வி.லோகநாதன், சி.எஸ்.நந்தகுமார், ஆட்டோ சீனு, வெள்ளை டி.முருகேசன், எம்.சரவணன், பிரஸ் கே.ரவி, அல்ராஜ், பி.ஆர்.அருண், யோகேஷ், மயிலை வாசுன், மயிலை வாசுன் ஜி.ஆனந்தராஜ், ஏழுமலை, நாகராஜன் பாண்டியராஜன், அந்தோணி ஜித்து ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.